

விமர்சனம்

# வேட்டை

ஆதிகாலத்து ஆள்மாறாட்டக் கதையை இன்னும் நாம் எத்தனை காலத்துக்குப் பார்த்துக்கொண்டிருப்பதோ தெரியவில்லை. அதுவும் காப்பியடிக்கப்பட்ட ஆள்மாறாட்டக் கதை. இயக்குநர் லிங்குசாமி இதைத் தெரிந்துதான் செய்திருக்கிறாரா? இல்லை 'அட இந்த முட்டாள் ரசிகர்களுக்கு என்ன தெரியப்போகிறது என்று வேண்டுமென்றுதான் செய்திருக்கிறாரா? புரியவில்லை.

மசாலா என்ற பார்முலாவை வைத்துக்கொண்டு கொஞ்சமும் வெட்கப்படாமல் ஹீரோ ஓப்பனிங் சாங், மொக்கை ஹீரோயின் காமெடி, கொலையாய் செய்துகொண்டிருக்கும் கோடூர வில்லன்கள், இடையிடையே எதுக்கு.. என்னத்துக்கு என்றே தெரியாமல் பஞ்ச் டயலாக், இறுதிக் காட்சி சண்டை எனப் படத்தைப் பற்றி எதையும் யோசிக்கவே கூடாது என்று ரசிகனை சூரசம்ஹாரம் செய்திருக்கிறார் இயக்குநர்.

கதை பற்றி எதையும் பெரிதாக விவரிக்கவும் தேவையில்லை. பாக்யராஜ் நடித்த 'அவசர போலீஸ் 100' கதையின் உல்டாதான் இந்த 'வேட்டை'.

பயந்த அண்ணன், துணிந்த தம்பி.. வானத்தைப் பார்த்து பூமியைப் பார்த்தால் வளர்ந்து நிற்கிறார்கள். உடனே அதைக் கொண்டாட ஹீரோ ஓப்பனிங் சாங். அதை முடித்து வெளியே வந்தால் போலீஸ் அப்பா மண்டையைப் போட்டுவிடுகிறார். அப்பாவின் வேலை பயந்த அண்ணனுக்கு. தூத்துக்குடியில் வேலை. அங்கு கதாநாயகிகள் அறிமுகம். அவர்களுக்கும் ஒரு ஓப்பனிங் சாங் போட்டுத் தாக்குகிறார்கள். தூத்துக்குடியிலோ வீதிக்கு வீதி ரவுடிகள்தான் அரசாங்கம் நடத்துகிறார்கள். அங்கு மக்களரசே கிடையாது போல.. பயந்த அண்ணனுக்கு அங்கு வேலை செய்யமுடியாத சூழல்.

துணிந்த தம்பி அங்கு வந்து அண்ணன் சார்பாக, 'ரவுடிங்கதான் அள்வச்சு அடிப்பாங்களா? ஏன் போலீஸுங்க ஆள் வச்சு அடிக்கக்கூடாதா?' என்று ரவுடிகளோடு மோதுகிறார். மாறாட்டம் செய்து அண்ணன் ஏமாற்றிவிட்டான் என்று ரவுடிகள் தெரிந்து கொண்டு அண்ணனை அடித்துக் காயப்போடுகிறார்கள்.

அதன் பிறகு அண்ணனுக்குத் தேவையான அறிவுரை, உடற்பயிற்சி எல்லாம் சொல்லிக்கொடுத்து வீரனாக உருவாக்குகிறார் தம்பி. அண்ணனும் தம்பியும் இணைந்து ரவுடிகளை அழிப்பது மீதிக்கதை.

நாயகன்கள் அறிமுகப்பாட்டும், நாயகிகள் அறிமுகப் பாட்டும் அவருடைய 'ரன்' படத்தையே காப்பியடித்திருக்கின்றன. போதாக்குறைக்கு நாயகிகளுக்கு ஒத்துவராத அந்த தாவணிகளை வேறு இன்னும் இயக்குநர் மறக்கமுடியாமல் போட்டு நம்மை அல்லல்படுத்துகிறார். (லிங்குசாமி என்றாலே தாவணிதான்.)

மாதவன் காமெடியாக நடித்திருக்கிறாரா..? சீரியஸாக நடித்துள்ளாரா..? குழம்பிப்போகத்தான் வேண்டியுள்ளது. பாவம் இந்தப் படத்தில் அவருக்கு ஒரு டூயட் கூட இல்லை.

ஆர்யா 'பாஸ் (எ) பாஸ்கரன்' படத்தை முடித்த கையோடு அங்கு அரியர்ஸ் வைத்து வெட்டியாகச் சுற்றித் திரிந்ததை, இந்தப் படத்திலும் தொடர்கிறார். நடிப்பில், உடலமைப்பில் அப்படத்தில் பார்த்த அதே ஆர்யா. அந்த விதத்தில் ஆர்யாவுக்கு இது, 'பாஸ் (எ) பாஸ்கரன் - 2' என்று சொல்லலாம்.

வில்லனைக் காண்பிக்கும் போதெல்லாம் பார்வையாளர்கள் நன்றாகச் சிரிக்கிறார்கள். 'டே மச்சான் மொக்க வில்லன்டா இவன்' என்று கமெண்ட் அடிக்கிறார்கள். கிராமங்களில் திருவிழா வைக்கும் நாளில், இரவு நாடகம் எனப்படும் கூத்து வைப்பார்கள். இந்தக் கூத்தில் வரும் வில்லன் போலத்தான் இந்தப் பட வில்லன் இருக்கிறார்.

கதாநாயகிகளான சமீரா ரெட்டிக்கும், அமலாபாலுக்கும் ஒரு வேலையும் இல்லை. மாதவனுக்கும், ஆர்யாவுக்கும் ஜோடிகள் வேண்டும். அதை நாயகிகள் செவ்வனே செய்திருக்கிறார்கள். அப்ப நடிப்பு...? அடப் போங்கப்பா!

யுவன் சங்கர் ராஜா தன் முந்தைய படங்களின் பாட்டிசையையும், காட்சி இசையையும் சுட்டு இசை கோர்த்திருக்கிறார். 'பப்பாம் பபரப்பாம்..' பாடலை மட்டும் ரசிக்கமுடிகிறது.

மற்றபடி இயக்குநரின் முந்தையப்பட காட்சிகள் கொஞ்சம், ரஜினி படம் கொஞ்சம், விஜய் பட காட்சிகள் கொஞ்சம், அஜித் படக் காட்சிகள் கொஞ்சம், சிம்பு படக் காட்சிகள் கொஞ்சம் என கதை, திரைக்கதை எல்லாவற்றையும் ஓரமாக உட்காரவைத்துவிட்டு, ஒட்டுப் போட்டுச் சேர்த்திருக்கும் இயக்குநர் லிங்குசாமி 'வேட்டை' படத்தில் 'லிங்க்'சாமியாக காட்சி அளிக்கிறார்.

பொழுது போக்குப் படம்.. பொழுது போகிறதா? போகிறது. படம் பார்த்துவிட்டு வெளியில் வந்தால் ஏதாவது மனதில் நிற்கிறதா? ப்ச்ச்ச்ச்.....!